சுற்றறிக்கை இலக்கம்: **PS/SB /Circular/1/2025**
2025 சனவரி மாதம் 01 ஆம் திகதி

சகல அமைச்சுச் செயலாளர்களுக்கும்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும்
மாகாண ஆளுநர்களின் செயலாளர்களுக்கும்.

**வெளிநாட்டு அரசுகள், சர்வதேச அமைப்புகள், இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்கள் மற்றும் வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்கள் ஆகியவற்றுடன் அரசாங்க அமைச்சுகள் / நிறுவனங்கள் தொடர்புகொள்ளுதல்.**

சனாதிபதியின் செயலாளரால் வெளியிடப்பட்ட 2023 சனவரி 09 ஆம் திகதியிடப்பட்ட PS/EAD/Circular/16/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையைத் திருத்தியமைக்கின்ற இந்த சுற்றறிக்கை, 2025 சனவரி 01 ஆம் திகதி யிலிருந்து நடைமுறைக்கு வரும்.

இந்த சுற்றறிக்கை, வெளிநாட்டு அரசுகள், சர்வதேச அமைப்புகள் மற்றும் வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்கள் ஆகியவற்றுடன் தொடர்புகொள்கின்றபோது, அரசாங்க நிறுவனங்களால் பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டு நெறிகளை வழங்குகின்றது. இது, இலங்கை அரசின் பல்வேறு அங்கங்களுக்கும் (அதாவது அமைச்சுக்கள், மாகாண சபைகள், திணைக்களங்கள்) மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களுக்கும், நிறுவனங்களுக்கும் அத்துடன், அவற்றின் இராஜதந்திர பிரதிநிதித்துவங்களுக்கும் இடையிலான முறைசார் மற்றும் நடைமுறைசார்ந்த தொடர்புகளை நெறிப்படுத்தி, ஒழுங்குபடுத்தும்.

பின்வரும் வழிகாட்டு நெறிகளுடன் கண்டிப்பாக இயைந்தொழுகுதல் வேண்டுமென்று மாண்புமிகு சனாதிபதி அவர்கள் பணித்துள்ளார். ஆகவே, இந்தச் சுற்றறிக்கையின் உள்ளடக்கங்களை தங்களின் கௌரவ அமைச்சர் / கௌரவ ஆளுநர் / கௌரவ பிரதி அமைச்சர் / கௌரவ முதலமைச்சர் மற்றும் தங்களின் அமைச்சு / மாகாண சபை / திணைக்களங்கள் மற்றும் தங்களது அதிகாரத்திற்குட்பட்ட நிறுவனங்களின் உரிய அலுவலர்கள் ஆகியோரின் கவனத்திற்குக்கொண்டுவருமாறு தாங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

## 1. <u>பொதுவானவை</u>

இராஜதந்திர உறவுகள் பற்றிய வியன்னா சமவாயத்தின் 41(2) ஆம் உறுப்புரை (1961) மற்றும் சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள் ஆகியவற்றிற்கு அமைவாக, வெளிநாட்டு உறவுகளைப் பேணுவதற்கான முக்கிய நிறுவனம் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு ஆகும். இது, வெளிநாட்டு உறவுகளைப் பேணுவதில் அரசின் பல்வேறு நிறுவனங்கள் ஒத்திசைவாக செயற்படுவதை உறுதிப்படுத்துகின்றது.

## 2. <u>இலங்கை அரசாங்கத்திற்கும் வெளிநாட்டு அரசாங்கங்கள் / நிறுவனங்களுக்கும் இடையேயான தொடர்பாடல் மார்க்கம்</u>

2.1 வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் நிறுவனங்களுடனான அனைத்து தொடர்பாடல்களும், கொள்கையளவில், பின்வருவனவற்றிற்கு அமைவாக வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினூடாகவே மேற்கொள்ளப்படுதல் வேண்டும்:

2.1.1 இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவனவும், பேச்சுவார்த்தைகள் அல்லது கொள்கைப் பிரச்சினைகளுடன் தொடர்புபட்டனவுமான வெளிநாட்டு அரசாங்கங்களுடனான அனைத்து தொடர்பாடல்களும், அதேபோன்று, அவ்வாறில்லாத, ஆனால் அவற்றிற்கு வழிவகுக்கக்கூடிய தொடர்பாடல்களும் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் ஊடாகவே மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.



ගාලු මුවදොර, කොළඹ 01 / காலி முகத்திடல், கொழும்பு 01 / Galle Face, Colombo 01
දුරකථන / தொலைபேசி / Telephones: ++ 94 (0) 11 2354418, ++ 94 (0) 11 2473873
ෆැක්ස් / தொலைநகல் / Fax: ++ 94 11 2446657
ඊ-තැපෑල / மின்-அஞ்சல் / e-mail: prsec@presidentsoffice.lk

2.1.2 இலங்கை தனது தூதரகத்தை கொண்டிராத, அல்லது பிறிதொரு நாட்டில் உள்ள இலங்கை தூதரகத்தினூடாக பிரதிநிதித்துவப்படுத்தப்படாத வெளிநாடொன்றின் அரசாங்கத்துடன் எத்தன்மைத்தான தொடர்பாடல்களும், வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு தவிர்ந்த, வேறு எந்த அரசாங்க நிறுவனத்தாலும் நேரடியாக மேற்கொள்ளப்படுதலாகாது.

2.1.3 இலங்கை அரசாங்கத்தின் சார்பாக, வெளிநாட்டு அரசாங்கங்கள், தூதரகங்கள், பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்புகளின் வதிவிடப் பிரதிநிதிகள் அத்துடன், வேறு அனைத்து இராஜதந்திர அலுவலர்கள் ஆகியோருடனான கடிதப் பரிமாற்றங்கள், இராஜதந்திர நடைமுறைக்கேற்ப வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் ஊடாகவே மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அத்தகைய கடிதப் பரிமாற்றம் தொடர்பாக தொடர்புபட்ட நிறுவனத்திற்கு வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சுக்குத் தேவையான மதியுரைகளை அல்லது ஆலோசனைகளை வழங்கலாம்.

2.1.4 மாகாண சபைகள் மற்றும் மாநகர சபைகள் உள்ளடங்கலான, உள்ளூராட்சி அமைப்புகள் ஆகியன வெளிநாட்டு அரசாங்கங்கள் / இலங்கையிலுள்ள தூதரகங் களுடன் மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புகள் ஆகியவற்றுடன் நேரடியான தொடர்புகளை அல்லது கடிதத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளுதலாகது.

2.1.5 விசேட தேவைகள் மற்றும் சூழ்நிலைகள் அகியவற்றைக் கவனத்தில்கொண்டு, பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு நிதியளிப்பு போன்ற அத்தகைய விசேட துறைகள் தொடர்பான வரிசை அமைச்சுகள் / நிறுவனங்கள் மற்றும் இலங்கைக்கென அமர்த்தப்பட்டுள்ள வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்கள் மற்றும் தொடர்புபட்ட அமைப்புகள் ஆகியவற்றுடனும், அத்துடன், வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங் களுடனும் நேரடியான தொடர்புகள் பின்வரும் சந்தர்ப்பங்களில் விரும்பத்தக்கதாக இருக்கலாம். இருப்பினும், அத்தகைய அனைத்து தொடர்பாடல்களும் குறிப்பாக, உடன்படிக்கைகள் / புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட தொடர்பாடல்கள் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சுக்கு தெரியப்படுத்துவது இன்றியமையாததாகும்.

(அ) அரசியல் / மூலோபாய விளைவுகளைக் கொண்ட பிரதான கொள்கைப் பிரச்சினைகள்,வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சுடன் கலந்தாலோசித்து தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்ற நிபந்தனையுடன், பின்வரும் விடயங்கள் மீது தொடர்புபட்டுள்ள வெளிநாட்டு அரசாங்கங்களுடன் / சர்வதேச அமைப்புகளுடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நேரடியாக தொடர்புகொள்ளலாம்:

- உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், சர்வதேச அபிவருத்தி முகவரமைப்பு, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஆபிரிக்க அபிவிருத்தி வங்கி போன்ற பல்தரப்பு / பிராந்திய நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்களைப் பெற்றுக்கொள்வதற்காக பேச்சுவார்த்தை நடத்துதல்;
- அயல் நாடுகளுக்குரிய அத்தகைய உதவி தொடர்பான முன்மொழிவுகள் தவிர்ந்த, ஏனைய கடன்கள் மற்றும் மானியங்கள் என்ற இரு வடிவத்திலுமான, இருதரப்பு ஒத்துழைப்பு உதவியைச் செயலாக்குதலும், ஏனைய நாடுகளுக்கான இருதரப்பு உதவியின் ஆரம்ப செயலாக்கமும், வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் அல்லது அதன் ஆலோசனையுடன் மேற்கொள்ளப் படுதல் வேண்டும்;
- வெளிநாட்டு வர்த்தகக் கடன் / வெளிநாட்டுக் கடன் தொடர்பான விடயங்கள்;
- அரசியல் உள்நோக்கங்கள் இல்லாமல் வெளிப்புற நிதி விளைவுகளைக் கொண்ட முற்றிலும் பொருளாதார பிரச்சினைகள்; அத்துடன்
- அந்நிய செலாவணி வளங்களின் முகாமைத்துவம்.

மேலேயுள்ள அனைத்து தொழில்நுட்ப விடயங்கள் குறித்த கலந்துரையாடல்கள் பற்றி வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சிற்கு கிரமமான முறையில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் ஒப்புதலுடன் பிரதானமான/முதன்மையான விடயங்கள் பற்றிய உடன்படிக்கைகள்

கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் மட்டுமே, தொழில்நுட்ப மற்றும் வழங்கல் விபரங்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சானது, வெளிநாட்டு அரசாங்கங்கள் / இலங்கையிலுள்ள அவர்களின் இராஜதந்திர தூதரகங்களுடன் தொடர்பு கொள்ளலாம். இந்த தொழில்நுட்ப விடயங்கள் குறித்த கலந்துரையாடல்கள் வெளிநாட்டு அலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சிற்கு கிரமமான முறையில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

2.1.6 வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் ஒருங்கிணைப்பில் ஏற்கனவே இறுதிவடிவம் கொடுக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப ஒத்துழைப்பு, பொருளுதவி மற்றும் உதவிகள் தொடர்பாக அமைச்சுகள் / திணைக்களங்கள் இலங்கையிலுள்ள உரிய ஐக்கிய நாடுகள் முகவரமைப்பு அலுவலகத்துடன் தொடர்ந்தும் நேரடியாக தொடர்புகொள்ளும். இருப்பினும், துறைகளுக்கிடையிலான அல்லது ஐக்கிய நாடுகள் முகவரகங்களுக்கு இடையிலான விளைவுகளைக் கொண்ட புதிய கொள்கை முன்முயற்சிகளுடன் தொடர்புபடுகின்ற எந்தவொரு விடயமும் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். இந்த நடைமுறைகள், ஐக்கிய நாடுகளுடன்கூடிய வரிசை முகவரமைப்பு களால் மற்றும் ஏனைய அரசுகளுக்கு இடையேயான அமைப்புகளால் ஒருங்கிணைக்கப் பட்ட பெண்கள், குழந்தைகள், உணவுப் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றம் போன்ற அத்தகைய விடயங்கள் தொடர்பான வெளியீடுகளுக்கும் / அறிக்கைகளுக்கும் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். குறிப்பாக, அத்தகைய வெளியீடுகளை / அறிக்கைகளைத் தயாரிப்பதில், ஆலோசனை செயன்முறையில் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சும் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

2.1.7 பேச்சுவார்த்தைகளுடன் அல்லது கொள்கை தொடர்பான பிரச்சினைகளுடன் தொடர்பு படாத, வழக்கமான அல்லது தொழில்நுட்ப விடயங்கள் பற்றிய முறைசாரா கடிதப் பரிமாற்றங்கள் அல்லது கலந்துரையாடல்கள், இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்களின் பிரதிநிதிகளுடன் மற்றும் வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களுடன் ஏனைய அமைச்சுகளால் நேரடியாக மேற்கொள்ளப்படலாம். அத்தகைய முறைசாரா தொடர்பாடல்களின் பிரதிகள், வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சிற்கு தெரியப்படுத்துவதற்காக வழங்கப்பட வேண்டுமா என்பது பற்றி அமைச்சுகள் முடிவு செய்யலாம்.

2.1.8 இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்கள், பிறிதொரு அமைச்சின் / திணைக்களத்தின் அலுவலகர் ஒருவரைத் தொடர்புகொண்டால், தொடர்புகொள்ளும் போது ஆரம்பத்தில் இது வழக்கமானதொரு விடயமாகத் தென்படினும், பின்னர் அதுவே மிகவும் முக்கியமானதொரு கொள்கைப் பிரச்சினையாக உருவெடுக்குமாயின், இந்த விடயத்தை இயலுமானவரையில் விரைவாக வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சிற்கு தெரியப்படுத்துவது அவசியமானதாகும்.

2.1.9 குறிப்பிட்டதொரு விடயத்தில் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் ஊடாக ஆரம்ப ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், தொழில்நுட்ப விடயங்களில், இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்கள் அல்லது சர்வதேச / அரசு சாரா தாபனங்களின் பிரதிநிதிகளுடன் பல்வேறு அமைச்சுகள் / முகவர்களின் தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு இடையில் அந்த விடயதானத்தில் நேரடியான கடிதப் பரிமாற்றம் அனுமதிக்கப்படுகின்றது. இருப்பினும், இத்தகைய அனைத்து தொடர்பாடல்கள் குறித்தும் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சிற்குத் தெரியப்படுத்தப்படுதல் வேண்டும்.

2.1.10 கொழும்பிலுள்ள இராஜதந்திர தூதரகத்திற்கு,வரிசை அமைச்சொன்றினை / திணைக்கள மொன்றினை / அரசாங்க முகவரகமொன்றினை அணுகுவதற்கு குறிப்பிட்ட அவசரங்கள் மற்றும் விசேட தேவைப்பாடுகள் காணப்படுகின்றபோதும், வெளிநாட்டுத் தூதரகங்களின் வேண்டுகோளை உரிய வரிசை அமைச்சிற்கு பிரதியிட்டு, வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் ஊடாக அனுப்புமாறு வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. இராஜதந்திர தூதரகத்தின் வேண்டுகோளை

கையாளும்போது, உரிய இலங்கை அரசாங்க நிறுவனம், அந்த நடைமுறை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்பது பற்றி நிச்சயப்படுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

2.2 கடந்த காலங்களில் பல தடவைகள் இடம்பெற்றிருந்த இக்கட்டானநிலை ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில், நிலுவையிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, தொடர்புபட்ட தேசிய முகவரமைப்பிற்கும், வெளிநாட்டு அரசாங்கத்திற்கும் இடையில் இடையீட்டாளராக இலங்கை அரசாங்கம் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு உதவ வேண்டியிருந்மையினால், மேற்கூறிய நடைமுறைகளைக் கடைப்பிடிப்பது மிகவும் முக்கியமானதாகும், இத்தகைய பிரச்சினைகள், தீர்க்கப்படாது விடப்பட்டால் அல்லது அதிகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்டால், இவை இலங்கைக்கும், வெளிநாட்டு அரசுக்கும் அல்லது தொடர்புபட்ட அமைப்புக்கும் இடையிலான ஒட்டுமொத்த இருதரப்பு உறவையே மோசமாகப் பாதிக்கும் சினமூட்டும் விடயங்களாக அல்லது அரசுகளுக்கிடையிலான பிணக்குகளாக மாறமுடியும். இத்தகைய நிலைமைகள் நீடித்தால், இவை, தொடர்புபட்டுள்ள வெளிநாட்டு அரசாங்கத்தால் அல்லது நிறுவனத்தால் இலங்கைக்கு முக்கியத்துவமிக்க விடயப்பரப்பில் அச்சுறுத்தி அல்லது பிரயோகித்து பழிவாங்குகின்ற நடவடிக்கைகளுக்குக்கூட இட்டுச்செல்ல முடியும்.

## 3. அமைச்சர்கள், தூதுவர்கள் அல்லது வெளிநாட்டு அரசாங்கங்களின் சிரேஷ்ட அலுவலர் களுடனான சந்திப்புகள்

அமைச்சர்கள் / வரிசை முகவரமைப்புகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் கீழ் அரச பதவி வகிக்கின்ற அலுவலர்கள் ஆகியோர், வெளிநாட்டு அரசாங்கங்களின் அமைச்சர்கள், பிரமுகர்கள், தூதுக்குழுக்கள், தூதுவர்கள் அல்லது சிரேஷ்ட அலுவலர்களை சந்திக்கின்றபோது வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் பிரதிநிதியொருவரை அழைத்தல் வேண்டும். இந்த நிபந்தனை மீறப்படுகின்ற சந்தர்ப்பத்தில், தொடர்புடைய முகவரமைப்பு குறைந்தபட்சம் சந்திப்பில் நடந்த கலந்துரையாடலின் சுருக்க அறிக்கையையாவது வெளிநாட்டு அலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சிற்கு வழங்குதல் வேண்டும்.

வெளிநாட்டுப் பிரமுகர்களுடனான சந்திப்பின் நிலை மற்றும் முக்கியத்துவத்தைப் பொறுத்து, தொடர்புபட்ட அரச நிறுவனங்கள், அத்தகைய கலந்துரையாடல்களின்போது எழுப்பப்படவுள்ள தொடர்புடைய தகவல்கள் மற்றும் விடயங்கள் பற்றி வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் ஆலோசனையைப் பெறுதல் வேண்டும்.

## 4. இலங்கையால் அங்கீகரிக்கப்படாத அல்லது இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியிருக்காத அரசுகள் / அரசாங்கங்களுடன் ஈடுபடுதல்

இலங்கையால் அங்கீகரிக்கப்படாத அல்லது இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியிருக்காத அரசுகளின் / அரசாங்கங்களின் பிரதிநிதிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளில் இலங்கை அரசாங்கத்தின் பிரமுகர்கள் / சிரேஷ்ட அலுவலர்கள் கலந்துகொண்ட சந்தர்ப்பங்கள் அண்மைக் காலங்களில் இருந்துள்ளதென்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இது இருதரப்பு மற்றும் பல்தரப்பு கரிசனைக்குரிய பிரச்சினைகளுக்கு வலிந்து இட்டுச்சென்றுள்ளது. இத்தகைய நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக, எந்தவொரு அரசாங்க நிறுவனமும் அத்தகைய நிகழ்வுகள் அல்லது கருத்தாடல்களில் அத்தகைய பிரதிநிதிகளுடன் ஈடுபடுதலுக்கான அழைப்பிதழ்களை ஏற்றுக்கொள்ளுதல் / விடுத்தல் ஆகாது. இது தொடர்பாக ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்பட்டால், வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சிடமிருந்து ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம்.

விசாரணைகளுக்கு : உபசரணைப் பிரிவு, வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டுவேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
தொலைபேசி : 011 2421816 / 011 2327048
மின்னஞ்சல் : cprot@mfa.gov.lk, protocol@mfa.gov.lk

## 5. வெளிநாட்டு உறவுகள் பற்றிய ஊடக அறிக்கை

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் உறவுகள், வெளிநாடுகள் தொடர்பான பிரச்சினைகள், இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள், வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்கள் போன்றவை தொடர்பான எத்தன்மைத்தான (நேர்காணல், சமூக ஊடகங்கள், அச்சு ஊடகங்கள், டிஜிட்டல்/இலத்திரனியல் ஊடகங்களால் தூண்டப்பட்ட கட்டுரைகள்) ஊடக அறிக்கைகளும்,

வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் எழுத்து மூலமான அனுமதியின்றி அமைச்சுகளால் / முகவரமைப்புகளால் வழங்கப்படுதலாகாது. இது, தேவையற்ற இருதரப்பு அல்லது பல்தரப்பு சம்பவங்கள் உருவாவதைத் தடுப்பதற்கும், இலங்கையின் வெளியுறவுக் கொள்கை தொடர்பான நிலையான அணுகுமுறையொன்றை ஒழுங்குபடுத்துவதற்குமானதொன்றாகும்.

இதேபோன்ற ஊடக அறிக்கைகளை வெளியிடுவதில் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு கௌரவ அமைச்சர்கள், கௌரவ இராஜாங்க/பிரதி அமைச்சர்கள், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விசாரணைகளுக்கு : பொது இராஜதந்திரப் பிரிவு, வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
தொலைபேசி : 011 2437633 மின்னஞ்சல் : publicity@mfa.gov.lk

## 6. சர்வதேச உடன்படிக்கைகள் / புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

*(அ) வெளிநாட்டு அமைப்புகளுடன் இருதரப்பு ,பிராந்திய மற்றும் பல்தரப்பு உடன்படிக்கைகள் / புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொடர்பில் வரிசை அமைச்சுகள் பேச்சுவார்த்தை நடத்துவதும், அவற்றில் கைச்சாத்திடுவதும்.*

(i) 2002 ஓகஸ்ட் 21 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை முடிபின்படி, இலங்கை அரசாங்கத்தின் வரிசை அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களால் நடத்தப்பட்ட வெளிநாட்டு அரச அதிகாரிகளுடனான ஒப்பந்த பேச்சுவார்த்தைகளுடன் தொடர்புபடுகின்ற எந்தவொரு முறையான முன்மொழிவும் முதலில் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் அவதானத்திற்கு கொண்டு வரப்படுதல் வேண்டும்.

வெளிநாட்டு நிறுவனங்களுடனான உடன்படிக்கைகள் / புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுகின்றபோது, அத்தகைய சட்ட ஆவணங்கள், பிறவற்றுக்கிடையில், வெளிநாட்டு உறவுக் கூருணர்வுகள் உள்ளனவா என்றும், கொள்கை மற்றும் சட்டக் கண்ணோட்டத்திலான விளைவுகள் உள்ளனவா என்றும் ஆராயும் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு அத்தகைய சட்ட ஆவணங்களைத் தெளிவுறுதிப்படுத்தியிருப்பது கட்டாயமானதாகும். கௌரவ சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறவேண்டிய சட்டரீதியான தாக்கங்களாக இருந்தால், வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் பரிந்துரையின்பேரில், வரிசை அமைச்சுகள் / முகவரமைப்புகள்/ சட்டமா அதிபர் திணைக்களத்துடன் நேரடியாக தொடர்புகொள்கின்ற உடன்படிக்கைகள் / புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தவிர்ந்த அத்தகைய உடன்படிக்கைகளை / புரிந்துணர்வு ஒப்பந்தங்களை வரிசை அமைச்சு, கௌரவ சட்டமா அதிபருக்கு அனுப்பலாம்.

வெளிநாட்டு நிதியைப் பெறுதல், கடன் பெறுவதற்கான ஏற்பாடுகள், கடன் எல்லைகள் மற்றும் ஏனைய ஒத்த வகையான ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்குப் பொறுப்பான நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் வெளி வளங்கள் திணைக்களம் ஆகியவை, கௌரவ சட்டமா அதிபரின் மற்றும் அமைச்சரவையின் உரிய வழிகாட்டுநெறிகளுக்கு, அனுமதிக்கு அமைவாக, தொடர்புபட்டுள்ள செயற்பாடுகளில் ஈடுபடும். அத்தகைய ஈடுபாடுகள் மற்றும் எந்தவொரு ஆவணத்தினதும் முடிபுகள் குறித்தும் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சிற்கு விரிவாக தெரியப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ii) பல்வேறு நிதியளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், கடன் பெறுவதற்கான ஏற்பாடுகள், கடன் திட்டங்கள் மற்றும் ஏனைய ஒத்த வகையான ஆவணங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகள் தொடர்பாக மத்திய அரசாங்கத்தின் மற்றும் மாகாண சபைகளின் கீழுள்ள அனைத்து முகவரமைப்புகளுக்குமான தேவையான வழிகாட்டுநெறிகளை வழங்கும் நோக்கில் 2023 மார்ச் 27 ஆம் திகதியிடப்பட்ட, MF/ERD/2023/01 ஆம் இலக்க சுற்றறிக்கையொன்று நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

(iii) மாகாண சபைகள், மாகாண அமைச்சர்கள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களுடனான உடன்படிக்கை முடிபு

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ், வெளிநாடுகளுடனான ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் / புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் சமவாயங்களில் கைச்சாத்திடுவது என்ற விடயம், ஒதுக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ளடக்கப்படுவதுடன், அரசியலமைப்பின் 44 ஆவது பிரிவின் கீழ் வெளிநாட்டு அலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சிற்கு உரித்தளிக்கப்படுகின்றது.

கௌரவ ஆளுநர்கள்/ கௌரவ முதலமைச்சர்கள் / மாகாண சபைகளின் கௌரவ அமைச்சர்கள் ஆகியோர் உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்களின் போது, வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சுடன் முன்னரே கலந்தலோசிக்காது, சட்ட ஆவணங்களில், வெளிநாடுகளின் மாகாண அமைப்புகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும் கூட கைச்சாத்திடுதலாகாது.

தற்போதைய அரசியலமைப்புத் தேவைப்பாடுகளைக் கருத்தில்கொண்டு, அத்தகைய உடன்படிக்கைகள் / புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், பிறவற்றுக்கிடையில், வெளிநாட்டு உறவு களின் உணர்வுகளில் மற்றும் சட்டக் கண்ணோட்டத்தில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றதா என்பதை ஆராயக்கூடிய வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினை ஆரம்பத்திலேயே அனுமதிப்பது கட்டாயமானதாகும். கௌரவ சட்டமாதிபரின் ஆலோசனையைப் பெற வேண்டிய சட்டரீதியான தாக்கங்களாக இருந்தால், வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் பரிந்துரையின்பேரில், உரிய மாகாண சபையின் வரிசை அமைச்சு, அத்தகைய எதிர்பார்க்கப் பட்ட சட்ட ஆவணத்தை கௌரவ சட்டமா அதிபருக்கு அனுப்பலாம்.

உரிய மாகாண சபை, வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் ஒப்புதலின் பின்னர் தொடர்ந்து செயற்படுதல் வேண்டும்.

(iv) மானிய உதவி அல்லது வெளிநாட்டுக் கடன்கள் போன்ற எத்தகைய வடிவத்திலுமான வெளிநாட்டு முதலீட்டு முன்மொழிவுகள், நிதியளிப்பு முன்மொழிவுகள் அல்லது இருதரப்பு அல்லது அரச முதலீட்டு கருத்திட்டங்களிலான பல்தரப்பு நிதியளிப்பு ஏற்பாடுகள் ஆகியவற்றில் கைச்சாத்திடுகின்றபோது, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முன் அனுமதி பெறப்படுதல் வேண்டும். அத்தகைய உடன்படிக்கைகளை / புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்துகொள்வதற்கு முன்னர், அமைச்சரவையினதும் கௌரவ சட்டமா அதிபரினதும் முன் அனுமதியைக் கோருவது கட்டாயமானதாகும். அத்தகைய சட்ட ஆவணங்கள் / கட்டுக்கோப்புகளில் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், அவை, ஒப்பந்த குறியீட்டை இற்றைப்படுத்தும் நோக்கில் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

*(ஆ) அமைச்சரவையின் அங்கீகாரம்*

ஒப்பந்தமொன்றின் உரை உருவாக்கப்பட்டதும், அரசாங்கத்தை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர், உரிய வரிசை அமைச்சினால் / திணைக்களத்தால் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தவுடன், அரசாங்கம் சார்பாக கையொப்பமிடுவதற்கு பெயர் குறிப்பிடப்படுகின்ற ஆளொருவருக்கு முழுத் தத்துவத்தையும் அளிக்கின்ற உரையினைத் தயாரிப்பதற்கு வரிசை அமைச்சுடன் / நிறுவனத் துடன் இணைந்து வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படும். இந்தத் தேவைப்பாடு, 'உடன்படிக்கை', 'புரிந்துணர்வு ஒப்பந்தம்' 'முதற்குறிப்பு' என எவ்வாறு தலைப்பிடப்பட்டிருந்தாலும், அனைத்து ஆவணங்களுக்கும் பிரயோகிக்கத்தக்கதாகும்.

*(இ) முழுமையான தத்துவங்கள்*

அரச அல்லது அரசாங்கத் தலைவர் மற்றும் வெளிநாட்டு அலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சர் மட்டுமே எந்தவொரு நபரிடமிருந்தும் எழுத்து மூலமான அதிகாரம் இல்லாது எந்தவொரு சர்வதேச கடப்பாட்டிலும் அரசாங்கத்தை ஈடுபடுத்த முடியும். எந்தவொரு சர்வதேச

உடன்படிக்கையிலும் கையொப்பமிடுவதற்கு முன்னர், ஏனைய அனைத்து நபர்களுக்கும் வெளிநாட்டு அலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சரிடமிருந்து எழுத்து மூலமான அதிகாரமளிப்பு (முழுத் தத்துவம்) தேவைப்படுகின்றது.

ஆகவே, வெளிநாட்டு அலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சரின் கையொப்பத்திற்காக தயாரிக்கப்படவுள்ள முழுத் தத்துவத்தைக் கொண்ட ஆவணத்தைக் கிடைக்கப்பெறச் செய்வதற்கு உரிய அமைச்சு/ திணைக்களம் / நிறுவனம் கையொப்பமிடும் திகதிக்கு (குறைந்தது 2 வாரங்களுக்கு) முன்னராக அமைச்சரவை அனுமதியின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

*(ஈ) அடையாளச் சான்றிதழ்கள்*

பல்தரப்பு உடன்படிக்கைகள் பற்றிய பேச்சுவார்த்தை அதேபோன்று, பல்தரப்பு அவைகளில் பங்கேற்பு ஆகிய சந்தர்ப்பங்களில், அரசாங்கத்தின் பிரதிநிதிகளை நியமிப்பதும், அவர்களின் அதிகார எல்லையை நிறுவுவதுமான அடையாள சான்றிதழ்கள் தேவைப்படும். தூதுக் குழுவிற்கு அமைச்சரொருவர் தலைமதாங்கும் சந்தர்ப்பங்களில், அத்தூதுக்குழு மாண்புமிகு சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவுடன், வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் அத்தகைய அடையாளச்சான்றிதழ்கள் பயனுக்குக்கொண்டு வரப்படும். அலுவலக மட்டத்திலான தூதுக்குழுவொன்று தொடர்பில், அந்தத் தூதுக்குழு உரிய வரிசை அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டவுடன், அடையாளச்சான்றிதழ்கள் தயாரிக்கப்படும். அடையாளச் சான்றிதழ்களுக்கான வேண்டுகோள்கள், அத்தகைய அனுமதியின் பிரதியொன்றுடன், அடையாளச் சான்றிதழ் தயாரிக்கப்படுத்துவதற்கு உதவுமுகமாக (குறைந்தது 2 வாரங்களுக்கு) முன்னராக வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

*(உ) பாராளுமன்றத்தின் அங்கீகாரம்*

இலங்கையால் பின்பற்றப்படுகின்ற நடைமுறையின்படி, சர்வதேச உடன்படிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அமைச்சரவையின் அனுமதியை மாத்திரமே தேவைப்படுத்துகின்றது. இருப்பினும், பொதுவாக, உடன்படிக்கைகள் / புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பாராளுமன்றத்திற்கு கொண்டுவர வேண்டிய மூன்று சந்தர்ப்பங்கள் உள்ளன. அவையாவன:

(i) பாராளுமன்றத்தின் சட்டமொன்று, குறிப்பாக பாராளுமன்றத்தின் அனுமதியை தேவைப்படுத்துகின்றவிடத்து, உதாரணமாக, அரசியலமைப்பின் 157 ஆவது உறுப்புரையின்படி, மேற்கூறிய உறுப்புரையின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள அரசியலமைப்புப் பாதுகாப்பைப் பெறும் நோக்கில், முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான, பாதுகாப்பதற்கான உடன்படிக்கைகள்,பாராளுமன்றத்தின் அனுமதிக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(ii) நாடு கடத்தல் மற்றும் இரட்டை வரிவிதிப்பைத் தவிர்த்தல் தொடர்பான உடன்படிக்கைகள்.

(iii) உள்நாட்டு மட்டத்தில் அந்த உடன்படிக்கயை நடைமுறைப்படுத்துவதற்கு, சட்டரீதியான நடைமுறை தேவைப்படுத்துகின்றவிடத்து.

(iv) உடன்படிக்கையின் கருப்பொருள், அதன் தகவல்களுக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படக்கூடிய அளவுக்கு அதியுயர் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றவிடத்து.

அத்தகைய சந்தர்ப்பங்களில் உரிய உடன்படிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு உரிய வரிசை அமைச்சு பொருத்தமான நடவடிக்கை எடுக்கும்.

*(ஊ) களஞ்சியப்படுத்தும் பணிகள்*

வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு என்பது இலங்கையால் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச உடன்படிக்கைகளை சேகரித்து வைக்கின்ற களஞ்சியமாகும். ஆகவே, இலங்கை சார்பாக கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் மூலப் பிரதியினை சேகரித்து வைப்பதற்காக வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் சட்டப் பிரிவினால் அமைச்சுக்கு அனுப்பப்படுதல் வேண்டும். அவசியமானதென்று கருதப்படுமிடத்து, முக்கியமான உடன்படிக்கைகள் இலங்கை உடன்படிக்கை ஒழுங்குநிரலில் வெளியிடப்படும்.

விசாரணைகளுக்கு : சட்டப் பிரிவு, வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டுவேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

மின்னஞ்சல் : legal@mfa.gov.lk

## 7. <u>வெளிநாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளுதல்</u>

பல சந்தர்ப்பங்களில், வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்கின்ற இலங்கை அமைச்சர்கள் மற்றும் ஏனைய சிரேஷ்ட அலுவலர்களுக்கு வெளிநாட்டு பிரமுகர்களுடன் உத்தியோகபூர்வ சந்திப்புகளை ஏற்பாடு செய்து தருமாறு பல தடவைகள் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சுக்கு மிகவும் குறுகிய கால அவகாசத்தில் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருந்தன. இலங்கையிலிருந்து பல அமைச்சர்கள் மற்றும் ஏனைய பிரமுகர்கள் அடுத்தடுத்து ஒரே வெளிநாட்டு தலைநகரிற்கு விஜயம் மேற்கொண்ட பல சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. பெரும்பாலும் ஒரே நோக்கத்திற்கான இந்த பல தடவை விஜயங்கள், சில சந்தர்ப்பங்களில் தொடர்புபட்டுள்ள வெளிநாட்டு அரசுகளை அதற்கான காரணத்தையும், தேவையையும் ஆராயத் தூண்டியுள்ளன. இதற்கு மேலதிகமாக, வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள், குறிப்பாக தற்போதைய சூழ்நிலையில் மட்டுப்படுத்தப்பட்ட பணியாளர்கள் மற்றும் வளங்களுடன் செயற்படுவதனால், போதிய முன் அறிவித்தலின்றி, தூதரக வசதிக்கான வேண்டுகோள்கள் தூதரகத்தை மிகவும் கடினமான நிலைமைக்கும், தாமதமான பெறுபேறுகளுக்கும் இட்டுச்செல்கின்றன.

கௌரவ அமைச்சர்கள், கௌரவ இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்கள் அங்கீகாரமளிக்கப்பட்ட நாடுகளுக்கு மேற்கொள்ளும் தமது விஜயங்கள் தொடர்பில் சில வேளைகளில் இலங்கைத் தூதரகங்களுக்கு அறிவிக்கப்படுதே இல்லை என்று அவதானிக்கப்பட்டுள்ளது. இது தேவையற்ற நிலமைகளுக்கு வழிவகுக்கும் என்பதுடன், தூதரகங்கள் எந்த உதவித் தேவைகளையும் வழங்கும் நிலையிலும் இல்லாது போகலாம்.

சில அமைச்சுக்கள், இலங்கை பிரமுகர்கள் அந்த நாடுகளுக்கு உத்தியோகபூர்வ / உத்தியோகபூர்வ மற்ற விஜயங்களை மேற்கொள்வதற்கான வசதிகள் மற்றும் ஏற்பாடுகளுக்காக வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களுக்கும், சில சந்தர்ப்பங்களில், வெளிநாட்டு அரசாங்கங்களின் அமைப்புகளுக்கும் நேரடியாக வேண்டுகோள் விடுக்கின்றன என்றும் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை நிருவாக மற்றும் நெறிமுறை அம்சங்கள் ஆகிய இரண்டிலும்,அதேபோன்று வெளிநாட்டு உறவுகள் என்ற நோக்கிலும் பொருத்தமற்றதாகும். வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான அனைத்து வேண்டு கோள்களும் இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் ஊடாக மட்டுமே மேற் கொள்ளப்படுதல் வேண்டும். அவசரகால நிலைமைகள் தவிர்ந்த ஏனைய எந்தவொரு நேரடியான வேண்டு கோள்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்றும், அதனையும்கூட வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சுடன் கலந்தாலோசித்து மேற்கொள்ளுமாறும் வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

விரும்பத்தகாத நிலமைகளைத் தவிர்க்கும் நோக்கில், அனைத்து விஜயங்களுக்குமான வேண்டு கோள்களும், பகுத்தாய்வு செய்யப்பட்டு முன்கூட்டியே சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவசியமான தாகும் என்பதோடு, இதன்பின்னர் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினூடாவே அனுப்பப்படுதலும் வேண்டும். இந்த வேண்டுகோள்கள், வெளிநாட்டு உறவுளில் ஏற்படுத்தும் தாக்கங்களை கவனத்திலெடுத்து, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து வெளிநாட்டிலுள்ள தூதரகங்களுக்கு அறிவுறுத்தி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் செயற்படுத்தப்படும். பல நாடுகளில் அமைச்சுசார் மற்றும் பிற உயர் மட்ட நியமனங்களுக்காக

அவர்களின் சொந்த ஒருங்கிணைப்பு செயல்முறைகளுக்கு அதிகளவு முன்கூட்டிய காலம் தேவைப்படுகின்றது.

உரிய வெளிநாட்டு விஜயங்களை மேற்கொள்வதற்கு மாண்புமிகு சனாதிபதி அவர்களின் முன் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

மேலும், அமைச்சர் / சிரேஷ்ட அலுவலரொருவர், வெளிநாட்டில் கலந்துரையாடலின் போது வெளிநாட்டு பிரமுகர் ஒருவருக்கு இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுப்பதற்கு முன்னர், வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் முன் ஒப்புதல் பெறுதல் வேண்டும். தொடர்புபட்டுள்ள பிரமுகரின் அரசுடனான இலங்கையின் உறவுகளின் பின்னணியிலும், உரிய நேரத்தில் இலங்கையின் ஒட்டுமொத்த வெளியுறவுக் கொள்கைக் கருத்தாய்வுகளின் பின்னணியிலும் இத்தகைய விஜயம் விரும்பத்தக்கதா என்பதை முக்கியமாகத் தீர்மானிப்பதற்கு இது அவசியமானதாகும். அத்தகைய தொரு விஜயத்தினால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் மற்றும் கிடைக்கப்பெறுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக் கவனத்தில்கொண்டு அதற்கான சரியான திட்டமிடல் ஆகியவையும் ஆராயப்பட வேண்டிய விடயங்களாகும்.

## 8. விசாக்கள்

விசாக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அத்துடன் / அல்லது உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட பயணங்கள் தொடர்பான இந்த விண்ணப்பங்களுக்கு ஆதரவாகவும் பல வேண்டுகோள்கள் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு மற்றும் வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதரகங்களுக்குக் கிடைக்கப் பெறுகின்றன.

உத்தியோகபூர்வ பதவிகளில் இருப்பவர்கள் உள்ளடங்கலாக தனிப்பட்ட பயணங்களுக்கான விசாக்களை எளிதாக்குவதற்கு வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சிற்கு அதிகாரம் இல்லை. எந்தவொரு அரச நிறுவனமும், தனியார் பயணத்திற்கான விசா விண்ணப்பங்களை ஆதரிக்கும் உத்தியோகபூர்வ கடிதங்களை வழங்குதலாகாது. உத்தேசிக்கப்பட்டுள்ள பயணம், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் அல்லது அரசாங்க அலுவலர்களின் உத்தியோகபூர்வ தன்மையிலான பயணமாக இருந்தால், அந்தத் தகவல்கள் விஜயம் மேற்கொள்கின்ற திகதிக்கு குறைந்தது நான்கு வாரங்களுக்கு முன்பாக வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சிற்கு வழங்கப்படுதல் வேண்டும். அத்தகைய பயணங்களுக்கு மாண்புமிகு சனாதிபதி அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளதென்று உத்தியோகபூர்வ நோக்கங்களுக்கான விசா கோரிக்கைக்கு ஆதரவளித்து மூன்றாம் நபர் குறிப்பொன்றை வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு வெளியிடும். பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரை, விசா உதவிக்கான கோரிக்கை பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளரால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

உத்தியோகபூர்வ பயணத்திற்கான விசா, வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதரகத்தின் மூலம் பெறப்பட வேண்டியிருக்கின்ற சந்தர்ப்பத்தில், அத்தகைய கோரிக்கை, உத்தேசிக்கப்பட்ட பயணத் திகதிக்கு குறைந்தது மூன்று வாரங்களுக்கு முன்பாக முன்வைக்கப்படுதல் வேண்டும்.

விசாரணைகளுக்கு : பயண அலகு, வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டுவேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
தொலைபேசி : 011 2423900 / 011 2328753
மின்னஞ்சல் : dgoamd@mfa.gov.lk, travel@mfa.gov.lk

## 9. இராஜதந்திர நிகழ்வுகளுக்கு சமூகமளித்தல்

வெளிநாட்டு அரசொன்றின் தேசிய தின நிகழ்வுகளில் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக ஒவ்வொரு மாதமும் அல்லது நிகழ்வின் அடிப்படையில் அமைச்சர் ஒருவரை நியமிப்பது குறித்து அமைச்சரவை முடிபெடுக்கின்றது. அத்தகைய நியமனம் செய்யப்படுமிடத்து, இலங்கை அரசாங்கம் தேசிய தின நிகழ்வுகளில் பொருத்தமான மட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதனால், பெயர் குறிப்பிடப்பட்ட அமைச்சரின் நேரடி பங்கேற்பை உறுதிப்படுத்துவது அவசிய மானதாகும். நியமிக்கப்பட்ட அமைச்சர் அதில் கலந்துகொள்வது தொடர்பாக ஏதேனும் சிரமம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில், மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கில், குறைந்தபட்சம் இரண்டு

வாரங்களுக்கு முன்பாக, வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் உபசரணைப் பிரிவுக்கு முன்கூட்டியே தெரிவித்தல் வேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் வாசிக்கப்பட வேண்டிய சுருக்க அறிக்கை வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் தயாரிக்கப்பட்டு, உரிய அமைச்சருக்கு அனுப்பப்படும்.

தேசிய தினங்களின் மாதாந்த அட்டவணை பற்றி உரிய அமைச்சருக்கு தெரிவிக்கப்படும்.

விசாரணைகளுக்கு: உபசரணைப் பிரிவு, வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டுவேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
தொலைபேசி : 011 2421816 / 011 2327048
மின்னஞ்சல் : cprot@mfa.gov.lk, protocol@mfa.gov.lk

இராஜதந்திர நிகழ்வுகளில் அமைச்சுகளிடமிருந்து / முகவரமைப்புகளிடமிருந்து தேவைப்படுத்தப்படு கின்ற எதேனும் பிரதிநிதித்துவம் / பங்கேற்பு உயர் மட்டத்தில் அதாவது பணிப்பாளர் மற்றும் அதற்கு மேற்பட்ட நிலையில் இருத்தல் வேண்டும்.

## 10. இராஜதந்திர தூதரங்கள் மூலமான அழைப்புகள்

தூதுவர் / உயர் ஸ்தானிகர் அல்லது தூதரகத் தலைவர் பதவி நிலைக்குக் கீழுள்ள மட்டத்திலுள்ள இராஜதந்திர தூதரகமொன்றினால் வழங்கப்பட்ட வரவேற்புகள், மதிய உணவு / இரவு உணவு நிகழ்வு களுக்கான அழைப்புகளை அமைச்சர்கள் ஏற்பதில்லை என்பதை உறுதிப்படுத்துவதும் முக்கியமான தாகும். இலங்கை இறையாண்மை கொண்ட அரசாகையால், உபசரிக்கின்ற நாடொன்றாகையால் அதன் அந்தஸ்தைப் பாதுகாக்கும் நோக்கில் பேணப்படவேண்டிய முக்கியத்துவமிக்கதான சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உபசரணை நெறிமுறையுடன் இது இணங்குகின்றது.

இலங்கையிலுள்ள இராஜதந்திர தூதரகங்கள் / பதவிகள் மூலம் தங்களின் அரசாங்கங்கள், தாபனங்கள் அல்லது நிறுவனங்களின் சார்பாக மாண்புமிகு சனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர், கௌரவ அமைச்சர்கள், கௌரவ ஆளுநர்கள், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மத்திய / மாகாண / உள்ளூராட்சி அரசாங்கங்களின் சிரேஷ்ட அலுவலர்கள் ஆகியோருக்கு அவர்களது நாடுகளின் விருந்தினர்களாக மாநாடுகளில் கலந்துகொள்வதற்காக அல்லது பிற வேறு நோக்கத்திற்காக அவர்களது நாடுகளின் விருந்தினர்களாக விடுக்கப்பட்ட ஏதேனும் அழைப்புகள் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் ஒப்புதலின்றி ஏற்றுக்கொள்ளப்படுதல் ஆகாது.

## 11. சர்வதேச / பிராந்திய மாநாடுகள், கருத்தரங்குகள் போன்றவற்றை நடத்துதல்

சர்வதேச / பிராந்திய மாநாடுகள், கருத்தரங்குகள் போன்றவற்றை நடத்துவது தொடர்பான நடைமுறைகளை நெறிப்படுத்துவது அவசியமானதாகும். அத்தகைய நிகழ்வொன்றினை, இலங்கையில் நடத்துவதற்கு வெளிநாட்டு அரசொன்றிற்கு அல்லது அமைப்பொன்றுக்கு உறுதியளிப்பதற்கு முன்னர், முதலில் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு அமைச்சினது ஒப்புதல் பெறப்படுதல் வேண்டும். ஒப்புதலுக்கான வேண்டுகோள், மாநாடு அல்லது கருத்தரங்கின் குறிக்கோள்கள், இலங்கைக்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் மற்றும் நன்மைகள், நடத்துவதற்கான நிதிச் செலவுகள், பங்கேற்கும் அரசுகளின் / நிறுவனங்களின் பட்டியல், விசாக்களை எளிதாக்குவதன் மூலம் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் வழங்கப்பட வேண்டிய ஏதேனும் உதவிகள், நெறிமுறை உதவி போன்றவற்றை சுருக்கமாகக் குறிப்பிடுதல் வேண்டும். அத்தகைய வேண்டுகோள்கள், பரிசீலிக்கப்பட்ட முடிவை எடுப்பதற்கு வெளிநாட்டிலுள்ள உரிய இலங்கை இராஜதந்திர தூதரகங்களுடன் அமைச்சு தொடர்புகொள்ளத்தக்கதாக அந்த அழைப்பை விடுப்பதற்கு குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்னராக வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சிற்கு விடுக்கப்படுதல் வேண்டும்.

## 12. வெளிநாடுகளிலிருந்து விஜயம் மேற்கொள்கின்ற தூதுக்குழுக்களின் இலங்கை நிகழ்ச்சித் திட்டங்கள்

கொழும்பில் வசிக்கின்ற தூதுவர்கள் / தூதரகத் தலைவர்கள் தங்கள் நாடுகளிலிருந்து வருகை தருகின்ற பிரதிநிதிகளுக்கு, இலங்கையின் அமைச்சர்கள் / பிரமுகர்கள் மற்றும் சிரேஷ்ட அலுவலர்களுடன் நேரடியாக சந்திப்புக்களை கோருகின்றனரென்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஏற்றுக்கொள்ளப்பட்ட இராஜதந்திர செயல்முறைக்கும், நடைமுறைக்கும் முரணானதாகும். தூதுவர்கள்/ தூதரகத் தலைவர்கள் தமது விஜயம் மேற்கொள்ளும் தூதுக்குழுக்களுக்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் முதலில் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் உபசரணைப் பிரிவிற்கு அறிவிக்க வேண்டுமென்பதோடு, உபசரணைப் பிரிவினால் இலங்கை அதிகாரிகளிடம் பொருத்தமான உத்தியோகபூர்வ சந்திப்பு நேரங்கள் கோரப்படும். இதே நடைமுறை ஆளுநர்களினாலும், மாகாண அமைச்சர்களினாலும் பின்பற்றப்படுதல் வேண்டும். இதேபோன்று, இலங்கையிலுள்ள தூதுவர்களால் / தூதரகத் தலைவர்களால், தங்களுக்காக அல்லது அவர்களின் தூதரக பதவியினர்களுக்காக ஆளுநர்களிடம் அல்லது மாகாண அதிகாரிகளிடம் நேரடியாகக் கோரப்படுகின்ற எந்தவொரு உத்தியோகபூர்வ சந்திப்பு நேரமும் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் உபசரணைப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, ஒப்புதல் பெறப்படுதலும் வேண்டும்.

## 13. விஜயம் மேற்கொள்கின்ற வெளிநாட்டு பிரமுகர்களுடனான சந்திப்புகள்

தூதுக்குழுக்கள் விஜயம் செய்வதன் மூலமாகவோ அல்லது கொழும்பில் வசிக்கும் தூதுவர்கள்/ தூதரகத் தலைவர்கள் மூலமாகவோ மாண்புமிகு சனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர் அல்லது கௌரவ அமைச்சர்கள் ஆகியோருக்கு அழைப்பு விடுப்பது தொடர்பாக, அத்தகைய சந்திப்புகள் பொருத்தமான நிலையில் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் ஆலோசனையைப் பெறவேண்டித் தேவைப்படுகின்றது. தூதரகங்களினதும் ஐக்கிய நாடுகள் சபை உள்ளடங்கலான வெளிநாட்டு தூதுக்குழுக்களினதும் கீழ்மட்ட அலுவலர்கள் மாண்புமிகு சனாதிபதியை, கௌரவ பிரதம அமைச்சரை அல்லது கௌரவ அமைச்சர்களைச் சந்திப்பதற்கு வசதியளிக்கப்படுலாகாது.

விசாரணைகளுக்கு : உபசரணைப் பிரிவு, வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டுவேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
தொலைபேசி : 011 2421816 / 011 2327048
மின்னஞ்சல் : cprot@mfa.gov.lk, protocol@mfa.gov.lk

## 14. இலங்கையிலிருந்து விஜயம் மேற்கொள்கின்ற இராஜதந்திரிகள் மற்றும் சிரேஷ்ட அலுவலர்களுக்கு வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களால் வழங்கப்படவேண்டிய வசதிகள்

வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு, அதேபோன்று வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களினால், உத்தியோகபூர்வ அல்லது தனிப்பட்ட நோக்கங்களுக்காக இலங்கையிலிருந்து பயணிக்கின்ற கௌரவ. அமைச்சர்கள், கௌரவ இராஜாங்க / பிரதி அமைச்சர்கள், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள் ஆகியோரிடமிருந்து வருகை, போக்குவரத்து, புறப்பாடு மற்றும் அவர்கள் தங்கும் போது விசேட விருந்தினர் பகுதி, தங்குமிடம் மற்றும் போக்குவரத்து ஒழுங்குகள் போன்றவற்றிற்கான வசதிகளை ஏற்பாடு செய்வதற்காக அடிக்கடி வேண்டுகோள்கள் கிடைக்கப் பெறுகின்றன.

விதிவிலக்கான நிலமைகளைத் தவிர, வெளிநாட்டு அரசாங்கங்களால் விசேட விருந்தினர் பகுதி வழங்கப்படுவது பெரும்பாலும் கட்டண அடிப்படையிலானதென்பது கவனிக்கத்தக்கது. ஆகவே, வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்கள் இந்த வசதியை இலவசமாகக் கிடைக்கச்செய்ய முடியாது. இச்சந்தர்ப்பத்தில், வெளிநாட்டில் உள்ள விசேட விருந்தினர் பகுதி வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு விரும்புகின்ற உரிய அமைச்சரின் / பிரமுகரின் / அலுவலர்களின் வரிசை அமைச்சு / நிறுவனங்கள், வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினூடாக வெளிநாட்டில் உள்ள இலங்கை தூதரகங்களுக்கு முன்கூட்டியே கொடுப்பனவுகளைச் செலுத்துதல் வேண்டும்.

இலங்கையின் வதிவிட தூதரகங்களைக் கொண்டுள்ள இடங்களுக்கு, உத்தியோகபூர்வ நோக்கங்களுக்காக மட்டுமே பிரமுகர்கள் விஜயம் மேற்கொள்வதற்கு விமான நிலையத்திலிருந்து ஹோட்டலுக்கான மற்றும் ஹோட்டலிலிருந்து விமான நிலையத்திற்கான உபசரணை உதவி மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களால் வழங்கப்படும். தற்போதிருக்கின்ற வழிகாட்டுநெறிகளின்படி, தனிப்பட்ட விஜயங்களின்போது, உபசரணை உதவி மாண்புமிகு சனாதிபதி, கௌரவ பிரதமர், கௌரவ பாராளுமன்ற சபாநாயகர், கௌரவ தலைமை நீதிவான், கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அமைச்சரவை அந்தஸ்துள்ள கௌரவ அமைச்சர்கள் ஆகியோருக்கு மட்டுமே வழங்கப்படும்.

மேலும், தற்போதைய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, தனிப்பட்ட விஜயங்களின்போது, கௌரவ பாராளுமன்ற சபாநாயகர், கௌரவ பிரதம நீதிவான், கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அமைச்சரவை அந்தஸ்துள்ள கௌரவ அமைச்சர்கள் ஆகியோருக்கு வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் அறிவுறுத்தலின்பேரில் விமான நிலையத்திலிருந்து ஹோட்டலுக்கு மற்றும் ஹோட்டலி லிருந்து விமான நிலையத்திற்கான போக்குவரத்து ஏற்பாடுகளுக்கான வசதிகளை தூதரகம் வழங்கும். ஆகவே, இத்தகைய பயணம் குறித்து உரிய காலத்தில் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சிற்கு அறிவிக்க வேண்டித் தேவைப்படுகின்றது. தொடர்புபட்டுள்ள பிற வேறு செலவுகள் வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் அல்லது வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மாண்புமிகு சனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஆகியோருக்கு தூதரகத்தால் பிறிதான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

இதன்படி, ஏனைய ஈடுபாடுகளுக்கான மாற்று போக்குவரத்து ஏற்பாடுகள் உரிய அமைச்சுகளால் / நிறுவனங்களால் வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களின் ஒருங்கிணைப்புடன் மேற் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், செலவுகள் வரிசை அமைச்சினால் / நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு அமைச்சினால் விசேடமாக அவ்வாறு செய்யுமாறு அறிவுறுத்தப்படாவிட்டால், தங்குமிடம், தொலைபேசி அழைப்புகள், போக்குவரத்து, கொண்டுசெல்லுதல் போன்ற வற்றிற்கான எந்தவொரு கட்டணங்களையும் செலுத்துவதற்கும், முற்பணத்தை வழங்கு வதற்கும் தூதரகம் எதிர்பார்க்கவில்லை. இது தொடர்பில், எச்சந்தர்ப்பத்திலும் விதிவிலக்குகள் மேற்கொள்ளப் படுதலாகாது. கௌரவ அமைச்சர் ஒருவரின், கௌரவ இராஜாங்க / பிரதி அமைச்சர் ஒருவரின், அமைச்சு, நிறுவனம் போன்றவற்றின் வேண்டுகோளின் பேரில் உத்தியோகபூர்வ விஜயங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றபோது. அத்தகைய விஜயத்துடன் தொடர்புபட்ட அனைத்து செலவுகளும் அத்தகைய வேண்டுகோளை முன்வைக்கின்ற வரிசை அமைச்சினால் / நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப் படுதல் வேண்டும்.

## 15. சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைக் கைக்கொள்வதனைக் கண்காணித்தல்

இச்சுற்றறிக்கையுடன் இயைந்தொழுகுவது பற்றிக் கண்காணிப்பதற்காக பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட உயர்மட்டக் குழுவொன்று அமைக்கப்படும்.

- கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்
- சனாதிபதியின் செயலாளர்
- அமைச்சரவைச் செயலாளர்
- செயலாளர் / வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு
- செயலாளர் / பொது நிருவாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு

இக்குழுவானது, தேவைப்படும்போதெல்லாம் கூட்டங்களைக் கூட்டுதல் வேண்டும் என்பதுடன், அலுவலர்களை அல்லது தனிநபர்களை கூட்டங்களில் பங்கேற்பதற்கு அழைத்தலும் வேண்டும். இக்குழு, தேவைப்படும்போது, இதனகத்து உள்ளடக்கப்பட்டுள்ள வழிகாட்டுநெறிகளுடன் இயைந் தொழுகுவது குறித்து, உரிய அமைச்சுகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் கவனத்தை வாய்மொழி மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ ஈர்க்கலாம்.

இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுடன் இயைந்தொழுகுவதில் தாங்கள் வழங்குகின்ற ஒத்துழைப்பு மிகவும் பாராட்டிற்குரியது.

**ஒப்பம் / கலாநிதி என்.எஸ்.குமாநாயக்க**
சனாதிபதியின் செயலாளர்

தொலைபேசி: + 94 11 2354420 தொலைநகல்: + 94 11 2446657
மின்னஞ்சல்: prsec@presidentsoffice.lk

**பிரதிகள்:**

1. கௌரவ சட்டமா அதிபர்
2. பிரதம அமைச்சரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. மத்திய வங்கி ஆளுநர்
5. தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்
6. கணக்காய்வாளர் தலைமையதிபதி
7. பாராளுமன்ற செயலாளர் நாயகம்
8. உயர் நீதிமன்றத்தின் பதிவாளர்
9. பாராளுமன்ற சபைத் தலைவரின் செயலாளர்
10. பிரதம கொறடாவின் செயலாளர்